**செய்தி வெளியீடு எண்: 958** **நாள்:14.12.2020**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

இன்று (14.12.2020) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், போக்குவரத்து (உள்) துறையில், சென்னை, தூத்துக்குடி மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி, பணிக்காலத்தில் இயற்கை எய்திய மற்றும் மருத்துவ இயலாமை காரணமாக ஓய்வு பெற்ற மூன்று பணியாளர்களின் தகுதி வாய்ந்த வாரிசுதாரர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளராக பணிநியமனத்திற்கான ஆணைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது, கூடுதல் தலைமை செயலர் / போக்குவரத்து ஆணையர் திரு.தென்காசி சு ஜவஹர், இ.ஆ.ப., மற்றும் இணைப் போக்குவரத்து ஆணையர்(நிர்வாகம்) திரு.பொன்.செந்தில்நாதன் ஆகியோர் உடனிருந்தார்கள்.

கூடுதல் தலைமை செயலர்/
போக்குவரத்து ஆணையர்,
சென்னை-05

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**